1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு திட்டம் ஆந்திர மாநிலத்தில் அமலில் இருப்பதாக அறிகிறேன். அது நமக்கு எந்தவகையில் ஏற்றது என்று பார்த்து, பின்னால் அவைக்குத் தெரிவிக்கப்படும்.

பிற மாநில பகுதிகளை ஒட்டிய தமிழக பகுதிகளில் அரிசி ஆலை ஆரம்பித்தல்.

142—(*வினா எண் 11896) திரு. டி. ஆர். வேங்கடராமணன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநில எல்லைப் பகுதிகளில் அரிசி ஆலை அமைக்க தடை ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்க அரசு பரிசீலித்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடராமணன்: தலைவரவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போடுகின்ற சமயத்தில், எனது தென்காசித் தொகுதி கேரள மாநிலத்தின் எல்லையில் இருப்பதால், அனுமதி கேட்டு கொடுக்கப்பட்ட மனுக்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்படாமல் இருந்தன. இந்தக் கேள்வி போட்டபின்னால் அந்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு உரிமமும் வழங்கப்பட்டுள்ளது; அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி ஆலை அமைக்க உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்தது. இப்போது அரசுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவர்கள் கேள்வி போட்ட நோக்கமே நிறைவேறிவிட்டதால் துணைக் கேள்விக்கு அவசியம் இல்லை. இருந்தாலும் இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி வரவேண்டும். மைய அரசுக்கு இந்த அரசு கடிதம் எழுதுவதாக இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடராமன்: தலைவரவர்களே, இன்றைக்கு நவீன அரிசி ஆலைகளில் ஷெல்லரை வைத்துத்தான் அரிசி அரைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டும் ஹல்லரை வைத்துத்தான் அரிசி அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை பயக்கும் இந்தத் திட்டத்தை அரிசி ஆலைகள் செயல்படுத்தவில்லை. ஆகவே, இப்படி தவறு செய்கின்ற அரிசி ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் தொழில் நுட்பத்தை எளிதில் ஏற்றுக்கொள்ளச் செய்வது இயலக்கூடிய காரியம் அல்ல. ஆகவே கொஞ்சம் காலம் ஆகத்தான் செய்யும்.

ஆம்பூரில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை.

*322—(*வினா எண் 3074) திரு. இரா. தாமரைக்கனி:* மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூரில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரில் உள்ள குடிநீர்த் திட்டத்தைப் பாதிக்கின்ற வகையில் அங்கே உள்ள பாலாற்றில் தோல் கழிவு நீர் கலக்கப் பட்டுவிடுவதால் அந்தத் தண்ணீர் உப்புத் தண்ணீராகப் போய் விடுகிறது. மேலும அந்தத் தண்ணீரைக் குளிப்பதற்குப் பயன படுத்துவதன் காரணத்தால் தோல் வியாதிகள் எல்லாம் வருகின்றன. எனவே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக இதனைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னதாக, அந்தத் தண்ணீரைப் பருகுவதற்கும், குளிப் பதற்கும் தடை விதித்துவிட்டு நிவாரண வேலையை அரசு முடுக்கிவிடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.